THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 10th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Periar Delta area

* 227 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any scheme has been investigated for improvement, renovation and repairs of irrigation canals and tanks in the Periar Delta area; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The scheme is still under investigation.

(*b*) Proposals are to be finalised after completion of investigation.

திரு. வை. சங்கரன் : இந்த ஸ்கீமை எடுத்துக்கொள்ளும்போது இர்ரிகேஷன் சானல்களிலும், ஏரிகளிலும் சிமெண்ட் லைன் செய்தால் அவை பழுதாகாமல் இருக்கும் என்பதை ஆலோசித்து கனம் அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதுபோன்ற ஆலோசனைகளும் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. செ. மாதவன் : பெரியார் ஆயக்கட்டில் விஸ்தரிக்கக்கூடிய திட்டம் இருந்ததே அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா? அதைச் செய்யும்போது இராமனாதபுரம் மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பெரியார் ஆயக்கட்டைப் பொறுத்தவரையில் அது ஆரம்பமான தேதியில் இருந்து இன்று வரை புதிய நிலங்கள் சாகுபடிக்கு வந்திருக்கின்றன. ஆனால், சில சமயங்களில் பற்றாக்குறை வந்திருக்கிறது. ஆகையால்தான், அடிப்படையான சில திருத்தங்கள் செய்தால் பயனுக்கு வரக் கூடிய நிலங்களை ஓரளவு பாதுகாக்கக் கூடிய வழி கிடைக்கும். அது முடிந்த பிறகு மேலும் தண்ணீர் கிடைக்கும்போது மற்ற இடங்களுக்கும் கொடுக்க ஆலோசிக்கப்படும்.

திரு. வை. சங்கரன்: பெரியார் டாமிலிருந்து 100, 110 அடி உயரத்திலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. அதற்கு மேலும் ஆழமான மட்டத்திலிருந்து டிரா செய்தால் தண்ணீர் அதிகமாகக் கிடைக்கும். ஆகையால் 10 அடி மேலும் இறக்கி அதிகமான தண்ணீர் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: பெரியார் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் எடுக்க இப்போது அங்கே சானல்கள் இருக்கின்றன. அவற்றை ஆழப்படுத்தினால் இன்னும் கொஞ்சம் தண்ணீர்கூட எடுக்கலாம். இது நம்முடைய அரசாங்கம் மட்டும் செய்யக்கூடியதல்ல. கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது. அப்படிக் கலந்து பேசுவதற்குச் சாத்தியப்பட்டால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. மாதவன்: பெரியார் தண்ணீரை முறைப்படுத்தி விட வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. தண்ணீரை முறைப்படுத்தி விட்ட பிறகு ஏராளமான நிலங்களுக்குத் தண்ணீர் கிடைத்திருக்கிறது. முறைப்படுத்தித் தண்ணீர் விடப்படுவதால் ஏராளமான நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்று பொறுப்புள்ள என்ஜினியர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: இந்தத் திட்டத்தினால், பெரியார் திட்டத்திலிருந்து தண்ணீரை ஒழுங்கு படுத்துவதன் காரணமாக, அதிகமான ஆயக்கட்டுக்களைக் காப்பாற்ற முடிந்தது. இதை அனுபவமாக வைத்துக்கொண்டு அடுத்து, அடுத்து வரக்கூடிய வருஷங்களில் எப்படிச் செய்யலாம் என்பது பரிசீலிக்கப்படும்.

திரு. வை. சங்கரன்: வைகை நதி வழியாகத் தண்ணீர் எடுத்தால் இராமனுதபுரம், சிவகங்கை போன்ற பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லக்கூடிய வைகை நதி அபிவிருத்தி வேலையும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: வைகைத் தண்ணீர் ரீமாடலில் ஸ்கீம் என்ற முறையிலே பரிசீலனை செய்து பெரிய திட்டமாக அது உருவாகி வருகிறது.

திரு. செ. மாதவன்: தண்ணீரை முறைப்படுத்தி விடக்கூடியதைப் பரிசீலிக்கும்போது அதிகமாகத் தண்ணீர் கிடைத்தால், திருப்பத்தூர் தாலுக்காவிற்கும் கொடுப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா: எந்தத் தாலூகா என்பது பிரச்னை அல்ல. வைகை அணைக்கட்டுத் திட்டத்தினால் ஏராளமான தண்ணீர் பாயவேண்டியிருக்கிறது. அது தொடர்ந்து அதிகமான தண்ணீர் கொடுக்கவேண்டுமானால் விவசாயிகளுக்கு எந்த வகையில் லாபம் ஏற்படக்கூடிய முறையில் செய்யமுடியுமோ, அந்த வகையில் செய்யப்படும்.

10th March 1966]

SRI C. CHIRANJEEVULU NAIDU : By renovating these canals and tanks, may I know the extent of land that is proposed to be brought under cultivation?

THE HON. SRI V. RAMAIAH : The proposal is to stabilise the existing ayacut.

Water from Bhavanisagar

* 228 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to let out water from Bhavanisagar at least for a single short-term crop?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

Cauvery water for Madras

* 229 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal for bringing Cauvery water for Madras with a view to supplementing water supply;

(b) whether any investigation has been made in this regard; and

(c) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : An answer[a] is placed on the table of the House.

திரு. காஞ்சி மணிமொழியார் : இந்தக் காவேரி திட்டத்தைப் பற்றி சென்னை மாநகராட்சியிலிருந்து ஏதேனும் திட்டம் சென்னை அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. வெ. ராமைய்யா : சென்னை அரசாங்கம்தான் வேண்டிய இன்வெஸ்டிகேஷன் செய்து ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டம் முடிந்துவிட்டால் சென்னை நகரத்தில் தண்ணீர்ப் பற்றுக்குறை தீர்ந்துவிடுமா? இதனால் காவேரி டெல்டாவில் தற்போது இருக்கக்கூடிய இர்ரிகேஷன் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாது இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : தண்ணீர்ப் பிரச்னை தீர்ந்து விடுவதற்குக் காரணம் இல்லை. ஏனென்றால் மக்களுடைய தொகை, இண்டஸ்ட்ரியல் யூஸ், அதோடு இல்லாமல் இங்கு இருக்கக் கூடிய பெரிய கப்பல் துறைமுகம்—இவைகளினுடைய தேவை களும் வளர்ந்துகொண்டுவருகிற காரணத்தினால் 5, 6 ஆண்டு களுக்கு முன், போதும் என்று நினைத்து நாம் பேட்ட

---

a Printed as Appendix on pages 448.